# அலகு – 3

## TT0303 படைப்பாற்றலை வளர்க்கும் வழிமுறைகள்

### இந்த அலகு என்ன சொல்கிறது?

மாணவர்கள் படங்களின் மூலம் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், கற்பனையை வெளிப்படுத்தவும், மொழிவழி விளையாடி படைப்பாற்றலை வளர்த்துக் கொள்ளவும் இவ்வலகில் கூறப்பட்டுள்ளன. கையெழுத்து இதழ், விளம்பரம், அறிவிப்பு ஆகியவற்றை படைப்பாற்றலின்வழி மாணவர்கள் உருவாக்க கற்றுக்கொள்ள இவ்வலகில் விளக்கப்பட்டுள்ளன.

### இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- படத்தின் வாயிலாகப் படைப்பாற்றலை வெளிப்படுத்தலாம்
- சூழல்நிலைக்கேற்ற கற்பனையை வெளிப்படுத்தலாம்.
- மொழிவழி விளையாட்டையும் குறுக்கெழுத்து புதிரையும் உருவாக்க கற்றுக்கொள்ளலாம்.
- கையெழுத்து இதழ் உருவாக்கலாம்.
- விளம்பரம், அறிவிப்பு, முத்திரைத் தொடர்களை உருவாக்கலாம்.

**பாட அமைப்பு**


| | |
|---|---|
| **3.0** | **பாட முன்னுரை** |
| **3.1** | **படம்வழிப் படைப்பாற்றல்** |
| 3.1.1 | கருத்துப்படங்கள் |
| 3.1.2 | வரைபடங்கள் |
| 3.1.3 | சுவரொட்டிகள் |
| 3.1.4 | கேலிச்சித்திரங்கள் |
| 3.1.5 | கேலிச் சித்திரத் தொடர்கள் |
| 3.1.6 | நிலப்படங்கள் |
| **3.2** | **சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாடு** |
| 3.2.1 | கற்பனை |
| 3.2.2 | கவிஞனின் விழைவும் கற்பனையும் |
| 3.2.3 | சங்க இலக்கியத்தில் கற்பனை |
| 3.2.4 | கம்பராமாயணத்தில் கற்பனை |
| 3.2.5 | சிலப்பதிகாரத்தில் கற்பனை |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **3.3** | **மொழி விளையாட்டுகளும் குறுக்கெழுத்துப் புதிர்களும்** |
| 3.3.1 | விளையாட்டு முறையைக் கையாளும் படிநிலைகள் |
| 3.3.2 | விளையாட்டு முறையின் நிறைகள் |
| 3.3.3 | விளையாட்டு முறையின் குறைகள் |
| 3.3.4 | குறுக்கெழுத்துப் புதிர்கள் |
| **3.4** | **கையெழுத்து இதழ் உருவாக்குதல்** |
| **3.5** | **விளம்பரம், அறிவிப்பு, முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்** |
| 3.5.1 | விளம்பரம் |
| 3.5.2 | அறிவிப்புகள் |
| 3.5.3 | முழக்கத் தொடர்கள் |
| **3.6** | **தொகுப்புரை** |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |

# 3.0 பாட முன்னுரை

## பாட முன்னுரை

கற்றல் என்பது வயது வேறுபாடின்றி நடைபெறும் ஒரு தொடர் செயலாகும். அதனைப் போன்றே படைப்பாற்றல் திறனும் தொடர் செயலாக இருப்பதனால் குழந்தைகள் ஒவ்வொரு நொடியும் தங்களின் ஐம்புலன்களின் வழியே எவற்றையேனும் கற்று கொண்டே இருக்கின்றனர். சிந்தனை ஆற்றல் இயங்கி கொண்டே இருக்கிறது. இதனால் அவர்களின் படைப்பாற்றல் தளமும் இயங்கி கொண்டே இருக்கிறது எனலாம். அவர்களின் சிந்தனைத் திறனையும் கற்பனைத் திறனையும் யாராலும் நிறுத்தவியலாது.

உலக உயிர்களுள் மனிதன் தான் சிந்தனை ஆற்றலைப் பெற்றிருப்பதால் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். அவன் பெற்ற மொழித்திறனால் மனத்தில் பதிந்த கருத்துகளைத் தக்க இலக்கிய வடிவில் வெளிப்படுத்த முற்படுவதைப் படைப்பு என்கிறோம். சிந்தனை வெளிப்பாட்டில் காலத்தைக் கடந்து நிற்கும் தன்மை எழுத்துப் பதிவுகளுக்கே உண்டு. அவை ஒழுங்குபட்ட வடிவத்தில் அழகுணர்ச்சியோடு ஆழ்ந்த சிந்தனை வீச்சாக வெளிப்பட்டிருப்பின் பலரும் விரும்பிக் கற்பர். எனவே, படைப்பாற்றல் என்பது சிந்தனையின் உயிரோட்டம், உயர்திறன் மட்டுமின்றி காலங் கடந்து நின்று மிகுந்த பயன் அளிப்பதாகும்.

எனவே, ஆசிரியர்கள் குழந்தைகளின் கற்றலுக்குத் துணைபுரிவதுடன் படைப்பாற்றலுக்கும் துணைபுரிய வேண்டும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருதல் வேண்டும். தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருதல் வேண்டும். குழந்தைகளின் வயது, ஆர்வம், விருப்பத்திற்கு ஏற்ப வழிநடத்தி, எளிய முறைகளைக் கையாண்டு குழந்தைகளின் படைப்பாற்றலை வளர்க்க வேண்டும்.

தாய்மொழியில்தான் படைப்பாற்றலை எளிதில் வளர்க்க முடியும். குழந்தைகள் இயல்பாகவே படைப்பாற்றல் உடையவர்கள் என்பது நாம் அறிந்த ஒன்றுதான். அவ்வாறு இருக்கையில் தொடக்கநிலையில் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்க ஏதுவாக அவர்களுக்குத் துணைபுரியும் முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

- படம்வழிப் படைப்பாற்றல்
- சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாடு
- மொழி விளையாட்டுகளும் குறுக்கெழுத்துப் புதிர்களும்

- கையெழுத்து இதழ் உருவாக்குதல்
- விளம்பரம், அறிவிப்பு, முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்

## 3.1 படம்வழிப் படைப்பாற்றல்

### படம்வழிப் படைப்பாற்றல்

படம் ஒன்று பத்தாயிரம் சொற்களுக்குச் சமம் என்றொரு பழமொழி உண்டு. எவ்வளவுதான் சொற்களால் விளக்கம் சொன்னாலும் ஒரு படத்தைப் பார்த்துக் குழந்தை புரிந்துகொள்வதைப் போலப் புரிய வைக்க முடியாது. அவ்வகையில் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்ப்பதற்குப் படங்களைப் பயன்படுத்துவது நல்லதொரு தொடக்கமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

பொதுவாகக் குழந்தைகள் படங்களைப் பார்ப்பதில் விருப்பம் உடையவர்கள். குறிப்பாகக் கண்கவரும் வண்ணப் படங்களாயின் குழந்தைகள் அவற்றை ஆர்வத்துடன் பார்ப்பர். கருத்துப் பொருளைப் காட்சிப் பொருளாகக் காட்ட உதவுபவை படங்களாகும். இவை குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கக்கூடியவை. இதன்மூலம் குழந்தைகளின் உற்றுநோக்கும் திறனை அதிகரிக்கச் செய்து, அவர்களின் சிந்தனையைத் தூண்டி படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம். கற்பித்தலில்,

- கருத்துப்படங்கள் (Concept Charts)
- வரைபடங்கள் (Graphs)
- சுவரொட்டிகள் (Posters)
- கேலிச்சித்திரங்கள் (Cartoons)
- கேலிச் சித்திரத் தொடர்கள் (Comics)
- நிலப்படங்கள் (Maps)

போன்ற பல்வேறு படங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை முறையாகப் பயன்படுத்தினால் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

### 3.1.1 கருத்துப்படங்கள்

அன்றாடம் நடைபெறும் சமூக நிகழ்வுகள் மீதான எள்ளலும் நகைச்சுவையும் நிறைந்த திறனாய்வுக் கருத்தின் வரைகோட்டு ஓவியமே கருத்துப்படம் ஆகும். பல சொற்கள் வெளிப்படுத்துவதை ஒரு கருத்துப்படம் சில கோடுகளின்வழி

எளிதில் உணர்த்திவிடுகின்றது. புரிந்துகொள்ள இயலாத கருத்துகளையோ, செய்திகளையோ எளிதாகப் படங்களின் மூலம் புரிய வைப்பது இதன் தன்மையாகும். ஆங்கிலத்தில் 'கார்ட்டூன்' (cartoon) என்று அழைக்கப்படும் இது தமிழில் கருத்துப்படம், விகடசித்திரம், வேடிக்கை சித்திரம், கேலிச்சித்திரம், விளக்கப்படம், கூடார்த்த படம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இதனைப் பாரதியார் 'விகடசித்திரம்' என்று குறிப்பிடுகிறார். தமிழில் முதன்முதலில் கருத்துப்படத்தை வெளியிட்டது பாரதி நடத்திய 'இந்தியா'(1907) இதழே ஆகும்.

### 3.1.2 வரைபடங்கள்

வரைபடங்கள் என்பவை நிலப்பகுதிகள், அரசியல் எல்லைகள், மக்கள் தொகை, இயற்கை வளங்கள், சாலைகள், தட்பவெப்ப நிலைகள், பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்துபவையாக அமையும்.

### 3.1.3 சுவரொட்டிகள்

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வகையில் செய்தி ஒன்றை உருவாக்கிச் சுவர்களில் ஒட்டப்படுவதால் சுவரொட்டி என்று அழைக்கப்படுகிறது. இது பொது மக்களின் கவனத்தை ஈர்த்து செய்தியொன்றைத் தெரிவிப்பனவாகவும் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகவும் அமைந்திருக்கும்.

### 3.1.4 கேலிச்சித்திரங்கள்

இயல்பான மனிதனின் தோற்றத்தை மிகைப்படுத்திக் கேலியும் கிண்டலுமாக வரைபடத்தின் மூலம் வெளிக்காட்டுவது கேலிச்சித்திரமாகும். பொதுவாகக் கேலிச் சித்திரங்கள் பார்த்தவுடன் சிரிப்பை வரவழைக்கக் கூடிய வகையில் அமைந்திருக்கும். கூடுதலாக அதன் விமர்சனப் பாங்கு தனித்துவமானதாக இருக்கும். அதிலும் அரசியல் கேலிச்சித்திரங்களுக்கு உலகெங்கும் பெரிய வரவேற்பு இருக்கிறது. "கேலிச்சித்திரங்கள் மூன்று வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

1. ஒரு நபரையோ அல்லது செயலையோ நையாண்டி செய்வது
2. ஒரு நபரையோ அல்லது செயலையோ புகழ்வது
3. மக்களின் உணர்ச்சியைத் தூண்டுவது

### 3.1.5 கேலிச் சித்திரத் தொடர்கள்

கேலிச்சித்திரங்களானது படிப்போரிடம் எள்ளல் நடையைக் கண்முன்னால் காட்டும் படங்களாகச் சுவாரசியமாக அமைக்கப் பெறுகிறது என்பதைக் கண்டோம். அவ்வகையான படங்களுடன் உரையாடல்கள் இணைக்கப்பட்டுத் தொடர்களாகவும் வெளிவருகின்றன. இதனை ஆங்கிலத்தில் 'காமிக்ஸ்' (Comics) என்பர். ஓவியங்களையும் சொற்களையும் ஒரு முறைப்படி ஒழுங்குசெய்து ஒரு கதையை / ஒரு நிகழ்வை நாடகப்படுத்துவதே காமிக்ஸ் என்று கூறுவர்.

### 3.1.6 நிலப்படங்கள்

நிலப்படம் (map) என்பது புவி அல்லது வேறு கோள்களின் மேற்பரப்பில் உள்ள புவியியல், நிலவியல், புவி அரசியல் போன்றவை தொடர்புள்ள அம்சங்களை அளவுவிகிதத்துக்கு (scale) அமையப் பதிலிட்டுக் காட்டுவதற்கான ஒரு வரைபடம் ஆகும். பொதுவாக இது ஒரு மட்டமான மேற்பரப்பில், வரையப்படுகின்றது. இதனைக் குறிக்க தேசப்படம், வரைபடம் போன்ற சொற்களும் வழக்கில் உள்ளன. உலகக் கோள மாதிரிகளில் நிலப்படம் ஒரு கோள மேற்பரப்பில் வரையப்படுகின்றது.



படங்களின் மூலம் மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்க்க கீழ்க்காணும் முறைகளில் செயல்பாடுகளை வழங்கலாம்.

தொடக்கநிலையில் படங்களைக் கொண்டு,

- பெயர்ச்சொற்களைக் கண்டறிதல்
- பெயர்ச்சொற்களுக்கு ஏற்ற வினைச் சொற்களை எழுதுதல்
- உரிய வருணனைச் சொற்களை உருவாக்குதல்
- வருணனைத் தொடர்களை உருவாக்குதல்
- எளிய தொடர்களை உருவாக்குதல்
- படத்துக்கு ஏற்ற தலைப்பிடுதல்
- படத்தின் கருப்பொருளைக் கூறுதல் / எழுதுதல்

ஆகிய பயிற்சிகளை அளிக்கலாம். தங்களிடமும் படைப்பாற்றல் திறன் உள்ளது என்ற எண்ணம் உருவாகும் வகையில் இச்செயல்பாடுகள் அமைய வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

| **பெயர்ச்சொற்களைக் கண்டறிதல்** | |
|---|---|
|  | பச்சைக்கிளி பெண் |
| **பெயர்ச்சொற்களுக்கு ஏற்ற வினைச் சொற்களை எழுதுதல்** | |
|  | சீதா புறாக்களுக்கு உணவளித்தாள். |
| **வருணனைத் தொடர்களை உருவாக்குதல்** | |

<table>
<tr><th colspan="2">பெயர்ச்சொற்களைக் கண்டறிதல்</th></tr>
<tr><td></td><td>அழகிய ரோஜா! சிவந்த ரோஜா!<br>மெல்லிய இதழ்களை . . .<br>மேனியாய்க் கொண்ட ரோஜா!<br>காம்பிலே முள்ளினைக்<br>காவலாய்க் கொண்ட ரோஜா!</td></tr>
<tr><th colspan="2">எளிய தொடர்களை உருவாக்குதல்</th></tr>
<tr><td></td><td>கயல்விழி : மலர்விழி! உனக்குத்<br>தமிழரின் ஆடை என்றால் என்ன<br>நினைவுக்கு வரும்?<br>மலர்விழி : எனக்கு</td></tr>
<tr><th colspan="2">படத்துக்கு ஏற்ற தலைப்பிடுதல்</th></tr>
<tr><td></td><td>சுத்தம் சோறு போடும்</td></tr>
<tr><th colspan="2">படத்தின் கருப்பொருளைக் கூறுதல்/ எழுதுதல்</th></tr>
<tr><td></td><td>குடும்பம்<br>நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்</td></tr>
<tr><th colspan="2">சிறிய கதைகள் எழுதுதல்</th></tr>
</table>

<table>
<tr><th colspan="2">பெயர்ச்சொற்களைக் கண்டறிதல்</th></tr>
<tr><td></td><td>தாரணியும் அகிலனும் நண்பர்கள். இருவரும் மாலை நேரத்தில் பூங்காவிற்கு விளையாடச் செல்வது வழக்கம். அன்று தாரணியின் கையில் ஒரு புத்தகத்தைக் கண்டான் அகிலன். அவளிடம் அதைப் பற்றி வினவினான். அதற்குத் தாரணி, 'இது என் தாத்தா எனக்குப் பரிசாகக் கொடுத்தார்.ஆர்வமூட்டும் பல கதைகள் உள்ளன. வா சேர்ந்து படிப்போம்' என்றாள். கதை கேட்பதில் மிகவும் ஆர்வம் கொண்ட அகிலன், தாரணியைப் படிக்கச் சொல்லிக் கேட்கத் தொடங்கினான்.</td></tr>
</table>

## 3.2 சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாடு

### சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாடு

சூழலுக்கு ஏற்ப கற்பனையை வெளிப்படுத்துவது என்பது தமிழுக்கும் தமிழர்க்கும் புதிதல்ல. கவிஞர் என்பவர் கலை உலகின் படைப்புக் கடவுள்; படைப்புக் கடவுளையும் மிஞ்சிய அழியாத சிற்பங்களை உருவாக்கிய கலைஞர். காரணம்: பிரம்மன் படைத்த உயிர்களுக்கு எல்லை உண்டு; இறுதி உண்டு. மாபெரும் கவிஞர்கள் கவிதைகளில் படைக்கும் உயிர்களுக்கு எல்லை இல்லை; இறுதி இல்லை. இதனால்தான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள்,

**அயன்படைப் பினையும் திருத்தி**
**அழகு செய்திடுவோன்**

என்று கம்பரைப் புகழ்ந்துள்ளார். பிரம்மன் படைப்புகளையும் திருத்தி அழகு செய்பவர் கம்பர் என்பது இப்பாடலின் பொருள் ஆகும்.

### 3.2.1 கற்பனை

இலக்கியங்கள் நம் வாழ்வோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்கும் அழகிய கலை வடிவங்களாக விளங்குவதற்கும் அவர்களுடைய கற்பனைத் திறனே அடித்தளமாகும். கற்பனை இன்றேல் படைப்பிலக்கியத்துக்கும் வரலாற்றுக்கும்

வேறுபாடு தெரியாது. மனித மனமே கற்பனைக்களனாக அமைகின்றது. கற்பனையானது இல்லாதவற்றை இருப்பதாகவும் நடைபெற இயலாதவற்றை நடப்பதாகவும் காட்டும்.

மனித மனம் நினைக்கத் தெரிந்து கொண்டபோதே கற்பனையும், உதித்திருக்க வேண்டும். கற்பனை என்பது மனதிலே உண்டாகும் படைப்புக்கு வித்தாகும். கலைஞன் தன் மனதில் உருவாகும் எண்ணங்களுக்குக் கொடுக்கும் உருவமே கற்பனையாகும். இதனையே,

"புலன்கள் நேரடியாக ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பொருளை நினைவிற்குக் கொண்டு வரும் ஒருவகைச் சக்தி"என அ.ச.ஞானசம்பந்தன் கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். (இவரின் கூற்று அன்று) இதன்மூலம் கற்பனை ஐம்புலன்களோடு தொடர்புடையது என்பதை அறியலாம்.

கற்பனையை ஆங்கிலத்தில் Imagination என அழைப்பார்கள். கற்பனை குறித்து தமிழ்மொழி அகராதி, "இல்லாததை யுள்ளதாயுண்டு பண்ணல், துடிப்பு, கட்டளை, கல்வி, கற்பிப்பு, சாதுரியம், நிருணம், பாவடை, புனைந்துரை விரிப்பு"என்கிறது.

சங்க இலக்கியங்களில் கற்பனை பற்றிய பல செய்திகள் காணப்பட்டாலும், கற்பனை என்ற சொல் இடம் பெறவில்லை. இக்கருத்தையே, "கற்பனை யென்னும் சொல் சங்கப்பாடல்களுள் காணப்படவில்லை. 'புனைவு' என்ற சொல் பெரும்பான்மையும் இப்பொருளில் வழங்கப்பட்டுள்ளது.இதிலிருந்து 'புனை' என்னும் வேர்ச்சொல்லடியாகப் பிறந்த "புனைவு, 'புனைதல்' என்னும் சொற்களே கற்பனை என்ற சொல் உணர்த்தும் பொருளில் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 3.2.2 கவிஞனின் விழைவும் கற்பனையும்

கவிஞர்கள் பல்வேறு வகையான கற்பனைகளைப் படைக்கின்றனர். நடக்கும் நிகழ்வை உள்ளவாறு கூறுதல், மற்றொன்று உள்ளவாறு விளக்காது, அவற்றில் சிலவற்றைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் திரித்தும் மனம் விரும்பியவாறு படைப்பர். உள்ளவாறே வாழ்க்கையைக் கற்பனை செய்வது இயலாத செயலன்று. ஆயின் மனம் விரும்புமாறு கற்பனை செய்வதே மனக்கிளர்ச்சி தரும். இத்தகைய கற்பனையே புலவனிடத்து அகத்தெழுச்சியினை

ஏற்படுத்துகிறது எனலாம். இக்கற்பனைத் திறனை, "பொருள்களை உள்ளவாறு கண்டு அந்த அழகில் அமைவதில்லை. கலைஞரின் மனம் பொருள்களை மேலும் அழகுபடுத்தி இன்னும் சிறந்த உலகத்தைப் படைக்க முயல்கிறது" என்ற கருத்து ஒப்புநோக்கத்தக்கது. இதிலிருந்து புதியன படைக்கும் ஆற்றலுக்கு இம்முயற்சியே அடிப்படை என உணரலாம்.

நல்ல கவிதையின் தோற்றத்திற்கு ஒரு பொருளை உள்ளவாறே புனைந்து கூறும் திறன் மட்டுமின்றி, உள்ளம் விரும்புமாறு புனைந்துரைக்கும் கற்பனைத் திறனும் இன்றியமையாததாகும் என்பது தெளிவாகின்றது.

### 3.2.3 சங்க இலக்கியத்தில் கற்பனை

அகநானூற்றில் மயிலின் ஆடற்காட்சி ஒன்று இத்தகைய கற்பனைக்குச் சான்றாக விளங்குகிறது. மலைச்சாரலில் ஆடுகின்ற மயில் காண்பவர் மருளக் களிநடம் புரிகின்ற விறலி ஒருத்தியைப் புலவரின் மனக்கண் முன் நிறுத்துகின்றது. விறலி ஆடுகின்ற பொழுது, குழலும், முழவும், யாழும் அரங்கத்தில் இனிய இசையை எழுப்பி அவள் ஆட்டத்திற்கு ஓர் ஒத்திசைவை உண்டாக்குதலை அறிந்தவர் கவிஞர். மயிலின் ஆட்டத்திற்கும் மலைச்சாரலில் ஓர் இசைப் பின்னணியைப் படைத்துத் தருகின்றார்.

**"ஆடு அமைக் குயின்ற அவர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆக**
**பாடு இன் அருவிப் பனிநீர் இன்இசை**
**கோடு அமை முழவின் துதை குரல் ஆக**
**கணக் கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டு யாழ் ஆக**
**இன்பல் இமிழ் இசைகேட்டு, கலி சிறந்து**
**முந்தி நல் அவை மருள்வன நோக்க**
**கழைவளர் அடுக்கத்து, இயலி ஆடுமயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றம் நாடன்"**

இப்பாடலில் மூங்கிலின் துளையில் மேல்காற்றுப் புகுதலால் குழலிசை எழுகின்றது. மலையருவி முழவாக ஒலிக்கின்றது. மான்களின் குரல் தூம்பின் இசையாகத் திகழ்கின்றது. வண்டின் ஒலி யாழின் இசையாக விளங்குகின்றது. இவற்றின் இனிய இசையினைக் கேட்டு மகிழ்ச்சி மிகுந்து மயிலாடுகின்றது. மந்திகள் அவ்வாடலை மருண்டு பார்க்கின்றன.

இம்மயிலின் ஆட்டத்தின் போதுகூட மலையில் பல்வேறு ஒலிகள் இருந்திருக்கும். ஆனால் கபிலர் அவ்வொலிகள் எல்லாவற்றையும் தம்பாடலில் படைத்துக் காட்டவில்லை. அவற்றிலிருந்து மூங்கிலின் துளையொலி, அருவியின் ஆர்ப்பொலி, மானின் குரலொலி, வண்டின் இன்னொலி ஆகியவற்றை மட்டும் பிரித்து மயிலின் ஆட்டத்திற்குப் பின்னணியாகத் தொகுத்துத் தந்திருக்கும் பாங்கு கவிஞனின் கற்பனைக்குச் சான்றாகும். இதில் கவிஞர் உள்ளவாறு கற்பனையை அமைக்காது தம் மனம் விரும்பியவாறு அமைத்துள்ளதை அறிய முடிகின்றது.

காந்தள் பூ மலரும் காட்சியினைக் குறுந்தொகை பாடலொன்றில்,

**"காந்தளங் கொழுமுகை காவல் செல்லாது**
**வண்டு வாய் திறக்கும் பொழுதிற் பண்டும்**
**தாமறி செம்மைச் சான்றோர்க் கண்ட**
**கடனறி மாக்கள்போல இடன் விட்டு**
**இதழ்களை யவிழ்ந்த ஏகல் வெற்பின்"**

என்ற பாடலில் ஆசிரியர் தம் உள்ளம் விரும்புமாறு கற்பனை செய்கின்றார். காந்தள் மலரும் வரை காத்திருக்கப் பெறாது வண்டுகள் மூடிய கொழுமுகைகளைத் தாமாகத் திறப்பதாக அவர் கற்பனை செய்துள்ளார். மொட்டு மலர வண்டுகள் தேனை உண்பது தான் இயற்கை நிகழ்ச்சியாகும். அந்த இயற்கை நிகழ்வை உள்ளாவறே பாடுவதில் புலவரின் உள்ளம் நிறைவினை அடையவில்லை. எனவே, வண்டுகள் தாமாக முகைகளின் வாயினைத் திறப்பதாகப் புலவர் கற்பனை செய்திருக்கின்றார்.

மனம் விரும்பியவாறு கற்பனை படைக்கும் சிறப்பை மு.வ., "இயற்கையைப் பாடுகின்ற கவிஞன் தான் கண்ட இயற்கை காட்சிகளை உள்ளவாறே பாடுவதில்லை. இயற்கையின் உண்மைத் தோற்றங்கள் நம் கண் முன்னர்க் காட்சியளித்தலின் அவற்றை அவ்வாறே கவிதையிலும் காண்பதற்கு நாம் விரும்புவதில்லை, கற்பனைத் திறத்தால் கூட்டியும், குறைத்தும் காட்டப்படுகின்ற இயற்கையின் மறுபடைப்பினையே நாம் விரும்புகின்றோம்" என்கிறார்.

### 3.2.4 கம்பராமாயணத்தில் கற்பனை

ஓர் இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதற்குக் காரணம் அதன் கவிதைப் பண்பு என்று கூறுவர். இலக்கியத்தின் பாடுபொருளும் நோக்கமும்

காரணங்கள்தாம். என்றாலும் இவற்றையும் கடந்து கவிதைப் பண்புகள் தலைமைக் காரணங்கள் ஆகின்றன. கம்பராமாயணம் காலம் கடந்து வாழ்வதற்குக் கதை மட்டுமே காரணம் அன்று. அக்கதையைச் சொன்ன விதமும் காரணம் ஆகும். கவிதைப் பண்பு சிறக்க அமைவதற்குத் தேர்ந்த சொல்லாட்சி ஒரு காரணம். இனிய ஓசை நயம் இன்னொரு காரணம். வளமான கற்பனை பிறிதொரு காரணம். கற்பனை விரியும் வருணனைகள், உவமைகள், உணர்ச்சிகள் கவிதையைச் சிறக்கச் செய்யும். செய்யுளுக்கு உரிய அணிநலன்கள் கவிதைக்கு மெருகு சேர்க்கும். இவை யாவும் கம்பரின் கவிதையில் உண்டு. எனவே தான் கம்பர் கவித்திறன் கற்றவரால் பாராட்டப் பெறுகிறது.

ஐந்து நிலங்களை (மலை, காடு, வயல், பாலை, கடல்) வருணிப்பது புலவர்களின் மரபு. கம்பர் மருத நில (வயல்) வளத்தைக் கற்பனையோடு வருணித்துள்ளார். மருத நிலத்தில் இயல்பாக உள்ளவை எல்லாம் புலவருக்குக் கற்பனையைத் தூண்டுகின்றன. மருத நிலம் அரசனாகக் கம்பரின் கற்பனையில் உருவாகிறது.

### அரசனின் அரியணை

தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்திரை எழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ!

– (கம்ப. பால காண்டம், நாட்டுப் படலம், 4.)

(தண்டலை = சோலை; விளக்கம் = விளக்கு; கொண்டல் = மேகம்; முழவு = இசைக்கருவி; ஏங்க = ஒலிக்க; குவளை = மலர்; திரை = அலைகள்; எழினி = திரைச்சீலை; தேம்பிழி = பிழிந்து எடுக்கப்பட்ட தேன்; மகரயாழ் = வீணை; மருதம் = நிலம் / நிலமாகிய அரசன்)

மருத நிலம் செழிப்போடு காணப்படுகிறது. கம்பருக்கு அது அரசன் அரியணையில் வீற்றிருப்பதைப் போலத் தோன்றுகிறது. தாமரை மலர்கள் விளக்குகளை ஏற்றி நிற்கின்றன; மேகங்கள் இசைக் கருவிகளை

முழக்குகின்றன; மகரயாழ் வாசிப்பது போல வண்டுகள் பாடுகின்றன; நீர் நிலைகளில் எழும் அலைகள் நாடக அரங்கின் திரைச் சீலைகள் போல் காட்சி தருகின்றன; அங்கே மயிலாகிய நாட்டியப் பெண் நடனம் ஆடுகிறாள்; குவளை மலர்கள் ஆகிய விழிகளால் அவையினர் விழித்துப் பார்க்கின்றனர்; இவ்வாறான அரசவையில் மருதமாகிய அரசன் வீற்றிருக்கிறான். இவ்வாறாகக் கம்பர் மருத நிலத்தை வருணித்துள்ளார்.

### 3.2.5 சிலப்பதிகாரத்தில் கற்பனை

சிலப்பதிகாரம் உலகப் பெருங்காப்பியங்களுள் ஒன்று. ஒரு பேரிலக்கியத்தில் எதிர்பார்க்கும் அனைத்துச் சுவைகளும் இதில் உண்டு. அடிகளின் கற்பனை வளத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள் காண்போம். அடிகளின் கற்பனைத் திறத்திற்கு நல்ல சான்றாக அமைவது அவருடைய வையை வருணனையாகும். வையை என்னும் பொய்யாக் குலக்கொடி, புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி என்று புகழும் அடிகள், அக்கொடியின் பேரழகினை வருணிக்கும் அழகே அழகு!

இவ்வாறே மதுரைக் கோட்டையின் மீது பறக்கும் பாண்டியனின் வெற்றிக் கொடிகளைப் பாராட்டும் அடிகள்,

**போருழுந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி**
**வாரல் என்பன போல் மறித்துக்கை காட்ட. . .**

(மதுரைக்காண்டம், புறஞ்சேரியிறுத்த காதை, வரிகள்: 189–190)

என்றார். பாண்டியன் கோட்டை மீது நாட்டிய வெற்றிக் கொடிகள், கண்ணகிக்கும், கோவலனுக்கும் விரைவில் வரப்போகும் துயரத்தை மனம் கொண்டு அவர்களை நோக்கி "மதுரைக்கு வாராது நீங்குக" என்பது போல் மறித்து ஆடின என்கின்றார். இவ்வாறே, தன் உடம்பைப் பூவாடையால் போர்த்துக் கொண்டும், தன் கண்ணீரை அடக்கிக் கொண்டும் வையை சென்றாள் என்கிறார். அடிகளின் கற்பனை ஆற்றலை பாடல் வரிகளால் தெளிவாக உணரலாம்.

அறிவு முக்கியமானதுதான். ஆனால், அதனைவிட முக்கியமானது கற்பனைத்திறன் என்று கூறினார் ஐன்ஸ்டீன். கற்பனைத் திறன் எப்படி கைவரப்பெறும்? இளம் வயதில் தாய்மொழியில் கற்பதும் இதைத்தான், இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளாகாமல் செய்து கற்பதும் கற்பனைத் திறனை வலுப்பெறச் செய்வதற்கான வழிமுறைகளாகும். எனவே கற்பனை ஆற்றலை மாணவர்கள் உணரும் வகையில் ஆசிரியர்கள்

இலக்கியங்களைக் கற்றுத்தருதல் வேண்டும். அவ்வாறு கற்பித்தல் நிகழுமாயின் மாணவர்களும் தங்களின் கற்பனையாற்றலைச் சிறப்புற வெளிப்படுத்துவர்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
| --- |
| 1. உங்கள் கற்பனையைக் கொண்டு கவிதை அல்லது சிறுகதை ஒன்றினை எழுதுக.<br>2. உங்களுக்கு பிடித்த தலைப்பில் மொழி விளையாட்டு ஒன்றினை உருவாக்குக. |

## 3.3 மொழி விளையாட்டுகளும் குறுக்கெழுத்துப் புதிர்களும்

### மொழி விளையாட்டுகளும் குறுக்கெழுத்துப் புதிர்களும்

குழந்தைகளுக்கு விளையாட்டில் ஆர்வமும், ஈடுபாடும் மிகுதியாக இருக்கும். விளையாட்டு மூலம் கற்பித்தால் குழந்தைகள் கற்றுக்கொள்வதில் ஆர்வத்துடன் இருப்பர். களைப்போ, சோர்வோ தோன்றாமல் கற்றுக்கொள்வர். விளையாடுவதால் உடல் வலுப்பெறுவதோடு மகிழ்ச்சியும் மன நிறைவும் கூட்டுறவு மனப்பான்மையும் ஆளுமைத் திறனும் குழந்தைகளிடம் ஏற்படும். மேலும், தம் எண்ணங்களை எளிமையாக வெளிப்படுத்துதல், ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுதல், திட்டமிடல், தலைமையேற்றல், தன்னுடைய முறை வரும் வரை காத்திருத்தல் போன்ற பண்புகளை விளையாட்டின் வாயிலாக மாணவர்கள் பெறுகின்றனர். பள்ளியில் வகுப்பறையிலும் வகுப்பறைக்கு வெளியிலும் விளையாட்டுகளை நடத்தலாம்.

மொழி பயிற்றுவித்தலில் பெரும்பாலும் வகுப்பறை விளையாட்டுகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. எந்த ஒரு விளையாட்டு எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து ஒவ்வொருவரின் தனித்திறன் வளர்ச்சிக்கும் உதவுகிறதோ அதுவே வகுப்பறைக்கு ஏற்ற விளையாட்டாக விளங்குகிறது. வகுப்பறை விளையாட்டுகளின்வழி சொல் விளையாட்டுகளை வடிவமைத்தல், கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், சொற்களஞ்சியம் பெருக்குதல் ஆகிய மொழித் திறன்களை வளர்க்கலாம். அதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் படைப்பாற்றல் திறனையும் வளர்க்கலாம்.

### 3.3.1 விளையாட்டு முறையைக் கையாளும் படிநிலைகள்

பயிற்றுவிக்கும் பாடப்பொருள், பாடவேளை, சூழல் முதலியவற்றிற்கு ஏற்ப மொழி விளையாட்டுகளை ஆசிரியர் திட்டமிடல் வேண்டும். விளையாடுவதற்குத்

தேவையான பொருள்களைத் தொகுத்து வைத்துக் கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு விளையாட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட திறன்கள் வெளிப்பட்டாலும் மொழித் திறனுக்கே முன்னுரிமை அளித்தல் வேண்டும். விளையாட்டிற்கு ஏற்பவும் விளையாடுவோரின் எண்ணிக்கைக்கு ஏற்பவும் விளையாடும் முறை, விளையாட்டிலிருந்து வெளியேறுதல், விளையாட்டின் பயன், குழுத்தலைவர், மதிப்பெண் வழங்குபவர், நடுவர் என விதிமுறைகளை வகுத்துக்கொள்ளுதல் வேண்டும். சிந்திப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும். சிக்கல்கள் ஏற்படும்பொழுது மட்டும் ஆசிரியர் நடுவராக இருந்து வழிகாட்டுதல் வேண்டும். விளையாடும் மாணவர்கள் தவறு செய்யும்பொழுது, அவர் வெளியேறும்போது, தவறுக்கான காரணத்தைக் கூறி வெற்றி பெறுவதற்கு வழிகாட்டுபவராகவும் ஊக்கமூட்டக் கூடியவராகவும் ஆசிரியர் விளங்க வேண்டும். தமிழ் மொழியினைக் கற்பிப்பதில் கீழ்க்காணும் விளையாட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

**தொடக்க நிலையில்,**

1. விடுபட்ட எழுத்தை நிரப்பச் செய்தல்.
2. குறிப்பிட்ட எழுத்துகளை வட்டமிட்டுக் காட்டுதல்.
3. படங்களையும் பெயர்களையும் பொருத்தச் செய்தல்.
4. பொருள்களுக்கான பெயர் எழுதச் செய்தல்.
5. பொருத்துதல் [உறுப்புகள்–அணிகலன்கள்; உறுப்புகள்–பயன்கள் போல்வன].
6. மாறியுள்ள எழுத்துகளை முறைப்படுத்தி அமைத்தல்.
7. எழுத்துக் கூட்டல்.
8. ஓர் எழுத்தைச் சேர்த்து அல்லது நீக்கிப் புதிய சொல் உருவாக்குதல்.
9. இரட்டைக் கொம்பு சேர்த்துச் சொல்லாக்குதல் [சாறு–சோறு; தாள்–தோள்].

இவற்றிற்கு

**அடுத்த நிலையில்,**

1. சொற்களை முறைமாற்றிக் கொடுத்து வாக்கியமாக்குதல்.
2. வினாக்களுக்கு விடை கூறுதல் விளையாட்டு.
3. எதிர்ச்சொல் கூறுதல்.
4. ரே ஒலியில் அமைந்த சொற்களைக் கூறச் செய்தல்.
5. கதை அமைத்தல்.
6. பொருந்தாதவற்றை அல்லது அந்நியனைக் கண்டுபிடித்தல்.

7. படம் காட்டித் தலைப்பினைக் கூற வைத்தல்.
8. ஆத்தி சூடி அல்லது திருக்குறள் கூறச்செய்தல்.
9. பாதி சொல்வேன்; மீதி கூறு! (இவ்விளையாட்டில் பாதிக் கதையை ஆசிரியர் கூறி மீதியைக் கூற வைத்தல்).
10. இரு பொருள் தரும் சொற்களைக் கூறுதல்.
11. விடுகதைகள் கூறுதல்

மாணவர்களின் தரம், வாழ்க்கைச் சூழல், ஆசிரியர் தம் தனித்திறன் முதலானவற்றிற்கு ஏற்ப மொழி விளையாட்டுகளைப் பெருக்கவும் சுருக்கவும் செய்து பயிற்சி அளிப்பர். இந்த முறைகளைக் கையாண்டு மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

எ.கா :

வட்ட நி__வே!
வா__ வீதியில். . .
யாரைத் தேடி
அ__கிறாயோ?

விடுபட்ட எழுத்தை நிரப்பி, கவிதையை நிறைவு செய்தல் வேண்டும்.
பறவைகள் மகிழ்ந்து
விளையாடவே
விளையாட்டு பூங்காவாக
________________
________________________

பின்பாதி கவிதையை நிறைவு செய்தல் வேண்டும்.

### 3.3.2 விளையாட்டு முறையின் நிறைகள்

- குழந்தைகள் மகிழ்வுடன் கற்பர்.
- கற்றல் விளைவுகளை உடனுக்குடன் அறிய இயலும்.
- மாணவர்களிடையே ஒற்றுமையும் உதவும் பண்பும் ஓங்கும்.
- கற்றல் விளையாட்டை முடித்ததும் வெற்றிப் பெருமிதம் ஏற்படும்.
- தானே ஒன்றைச் செய்யும்பொழுது நினைவில் நிலை நிறுத்தப்படுகிறது.
- முயன்று தவறிக் கற்பதால் மீண்டும் தவறு செய்ய வாய்ப்பு ஏற்படாது.
- ஆசிரியர் திட்டமிடுவதால் பேசுதல் குறைகிறது.

- குழந்தை மையக் கற்றலுக்கு இம்முறை உதவுகிறது.
- கற்கிறோம் என்ற எண்ணம் தோன்றாமல் எளிதாகக் கற்றுக்கொள்ள விளையாட்டு முறை உதவுகிறது.

### 3.3.3 விளையாட்டு முறையின் குறைகள்

- மொழித் திறன்கள் அனைத்தையும் விளையாட்டு முறையில் கற்க இயலாது.
- ஒரே விளையாட்டு முறையைப் பின்பற்றும்போது குழந்தைகளிடம் கூச்சல், குழப்பம் ஏற்படும்.
- பாடப்பொருள், விளையாட்டு முறை ஆகிய இரண்டினையும் ஒவ்வொரு நாளும் திட்டமிடுவதும் செயற்படுத்துவதும் ஆசிரியர்க்குப் பணிச் சுமையை ஏற்படுத்தும்.
- நாள் முழுவதும் தொடர்ந்து விளையாடாமல் கற்பதும் – கற்பிப்பதும் சோர்வைத் தரும்.
- விளையாட்டு முறையில் பிற வகுப்புகளின் கவனம் சிதறும்.
- ஆதலால் இவற்றை மனத்தில் கொண்டு அதற்கு ஏற்ப விளையாட்டு முறையைப் பின்பற்ற வேண்டும்.

### 3.3.4 குறுக்கெழுத்துப் புதிர்கள்

கட்டங்களைச் சொற்களால் நிரப்பும் ஒருவித சொல் விளையாட்டே குறுக்கெழுத்துப் புதிர் எனப்படுகிறது. கருப்பு, வெள்ளை நிறங்களில் கட்டங்களும் அதில் வெள்ளைக் கட்டங்களில் எண்களும் கொடுக்கப்பட்டிருக்கும். வெள்ளைக் கட்டங்களை நிரப்புவதற்குக் குறிப்புகள் உண்டு. கருப்புக் கட்டங்களைக் கண்டுகொள்ளத் தேவையில்லை. இடமிருந்து வலமாகவும், மேலிருந்து கீழாகவும் கட்டத்தை நிரப்புமாறு புதிர் அமைக்கப்பட்டிருக்கும். சில புதிர்கள் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என்று நிரப்பும் வகையிலும் அமைந்திருக்கும்.

### குறுக்கெழுத்துப் புதிர் விளையாடுவதன் நன்மைகள்

குறுக்கெழுத்துப் புதிர் விளையாடுவதால் கணக்கற்ற நன்மைகள் கிடைக்கின்றன. அவற்றுள் சில.

- ❖ சொற்களஞ்சியம் (vocabulary) அதிகரிக்கிறது
- ❖ மன அழுத்தத்தைக் (stress) குறைக்கிறது
- ❖ படைப்பாற்றலைத் (creativity) தூண்டுகிறது.

- ❖ பகுப்பாய்வுத் திறன்களை (analytical skills ) மேம்படுத்துகிறது.
- ❖ மூளையைத் துருதுருவென இயங்க வைக்கிறது.
- ❖ பயனுள்ள பொழுதுபோக்கு

## சொற்களஞ்சியம் அதிகரிக்கிறது

எந்த மொழியையும் சரளமாய்ப் பேசுவதற்கான அடித்தளத்தைக் கொடுப்பது அதன் சொற்கள்தான். ஏராளமான, புதிய வியப்பூட்டும் சொற்களைத் தெரிந்துகொள்ளவும் சொற்களஞ்சியத்தை மேம்படுத்தவும் குறுக்கெழுத்துப் புதிர்கள் உதவுகின்றன. இதன்மூலம் புதுப்புதுச் சொற்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. எழுத்துப் பிழையின்றி மொழியைப் பயில உதவுகிறது.

## மன அழுத்தத்தைக் குறைக்கிறது

மன அழுத்தமாக உணரும்போது உங்கள் மனதை அமைதிப்படுத்தி, தெளிவாகச் சிந்தித்து, மன அழுத்தத்தைக் குறைத்து உடலையும் மனதையும் அமைதியான நிலைக்கு கொண்டுவர குறுக்கெழுத்துப் புதிர் ஒரு சிறந்த வழியாகும். இந்தப் புதிர்களின் மீதான ஆர்வம் அதிகமாகும்போது மன அழுத்தம் குறைவதை நீங்களே உணரலாம்.

## படைப்பாற்றலைத் தூண்டுகிறது.

குறுக்கெழுத்துப் புதிரில் சில விடைகளைக் கண்டுபிடிப்பது கடினமாய் இருக்கும். இதன் காரணமாக, நீங்கள் வழக்கத்திற்கு மாறாகச் சிந்திக்க வேண்டும், அதாவது மாற்றி யோசிக்க வேண்டும். இப்படி வெவ்வேறு வழிகளில் சிந்திப்பது உங்கள் படைப்பாற்றலைத் தூண்டுவதாக அமையும்.

## பகுப்பாய்வுத் திறன்களை மேம்படுத்துகிறது.

ஒரு துப்பறிவாளரைப்போல நீங்கள் விளையாடும் குறுக்கெழுத்து புதிர்கள் உங்கள் பகுப்பாய்வுத் திறன்களை மேம்படுத்துகின்றன. சிக்கல்களைத் தீர்த்து விடைகளைக் கண்டறியும் திறமை வாழ்க்கையில் பல சவால்களைக் கையாளுவதற்கும் எதிர்கொள்வதற்கும் நம்பிக்கையை உங்களுக்கு வழங்குகிறது.

## மூளையைத் துருதுருவென இயங்க வைக்கிறது.


ஒருபோதும் உங்கள் மூளைக்கு பயிற்சி அளிக்கவில்லை என்றால், அது சோம்பேறியாகி, சிந்திக்கும் திறனை மெல்ல இழக்கும். வாரத்திற்கு ஒரு

முறையாவது குறுக்கெழுத்து புதிர்களைச் செய்வதன் மூலம் உங்கள் மூளைச் செல்கள் புத்துணர்வோடு இருக்கும்.

## பயனுள்ள பொழுதுபோக்கு

பொழுதுபோக்கு என்று எடுத்துக்கொண்டாலே அவை அதிக பொருட்செலவைக் கொண்டவையாகத்தான் இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் குறுக்கெழுத்து புதிரை விளையாடுவதற்கு உங்களுக்கு அதிக செலவு ஆகாது. இதனால் பொது அறிவும் வளரும். பயனுள்ள வகையில் பொழுதினைச் செலவழிக்கும் ஆற்றலைப் பெறுவர். எடுத்துக்காட்டாக,

## மாதிரி குறுக்கெழுத்துப் புதிர் (கட்டங்களைப் பற்றிச் சொல்லலாமே!)




**கீழிருந்து மேல்**

1. தமிழ் மொழியின் முதல் இலக்கணநூல்---------
2. பாரதிதாசன் இவர்மேல் பற்று வைத்திருந்தார்--------
3. புதுவையில் தோன்றிய புதுமைப் பாவலர்--------

**மேலிருந்து கீழ்**

1. பாரதிதாசனின் தந்தையின் பெயர்---------
2. பாரதியார் எழுதிய பாடலில் ஒன்று--------
3. முத்தமிழ் என்பது இயல், இசை--------

**இடமிருந்து வலம்**

1. உடலுக்குக் குளிர்ச்சி தருவது---------
2. உலகின் முதன்மொழி மூத்த மொழி--------
3. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பொருள்--------

# 3.4 கையெழுத்து இதழ் உருவாக்குதல்

## கையெழுத்து இதழ் உருவாக்குதல்

உங்களுடைய கையெழுத்தில் இதழினை உருவாக்குவது கையெழுத்து இதழாகும். அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிப்பதற்குமுன் கையெழுத்து பிரதிகள்தான் பயன்பாட்டில் இருந்தன. அரசர்கள் தங்களுடைய செல்வ செழுப்பினைக் காட்ட தங்கத்தாலான கையெழுத்து இதழ்களையெல்லாம் வடிவமைத்து இருக்கின்றனர். அவ்வகையில் கவிதை, கட்டுரை, சிறுகதை, விளம்பரங்கள், ஒருபக்க கதை, புதிர் விளையாட்டுகள் போன்றவற்றைக் கொண்டு நாம் விரும்பிய வண்ணம் ஒரு கையெழுத்து இதழை உருவாக்கலாம். இன்றும் **'தாழம் பூ'** என்ற பெயரில் எம்.எஸ்.கோவிந்தராஜ் என்பவர் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து 32 பக்கங்களைக் கொண்ட கையெழுத்து இதழை நடத்தி வருகிறார்.

தமிழில் முதலில் பத்திரிகை என்ற சொல் கையாளப்பட்டது. ஏடு, மலர், மடல், முடங்கல், தாள், தாளிகை, சுவடி முதலிய சொற்களும் பத்திரிகையைக் குறிக்கும். தற்போது இதழ் என்ற சொல்லும் இதழியல் என்ற சொல்லும் கலைச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

வார, மாத, ஆண்டு இதழ்களையும், கவிதை, சிறுகதை, துணுக்குகள், கட்டுரை முதலியவற்றைத் தாங்கி நிற்கும் வெளியீடுகளையும் இதழ் என்ற சொல் குறிப்பிடுகிறது. அதாவது இதழியல் என்பது இதழ் தொடர்பான எல்லாவற்றையும் உள்ளடக்கிய கலைச் சொல்லாக உள்ளது.

இதழியல் பற்றிய பாரதிதாசனது கவிதை

**காரிருள் அகத்தில் நல்ல**
**கதிரொளி நீதான்! இந்தப்**
**பாரிடைத் துயில்வோர் கண்ணில்**
**பாய்ந்திடும் எழுச்சி நீதான்**
**ஊரினை நாட்டை இந்த**
**உலகினை ஒன்று சேர்க்கப்**
**பேரறி வாளர் நெஞ்சில்**
**பிறந்தபத் திரிகைப் பெண்ணே!**

இதழ்களின் நோக்கத்தையும் சிறப்புக் கூறுகளையும் பணிகளையும் உள்ளடக்கிய இதழியல் என்ற கலைச்சொல்லின் முழுமையான பரிமாணங்களையும் தன்னகத்தே பெற்று இக்கவிதை மிளிர்கிறது எனலாம்.

### அகராதி தரும் பொருள்

**'வெளியிடுவதற்காகவோ பதிப்பிப்பதற்காகவோ ஒலி பரப்புவதற்காகவோ நடைமுறை ஈடுபாடுள்ள விவரங்களைத் தொகுப்பதும், எழுதுவதும், செப்பனிடுவதும் இதழியல்'** என்று வெப்ஸ்டர் பன்னாட்டு அகராதி (Webster) குறிப்பிடுகிறது.

**'பொது இதழ்களுக்கு எழுதுதல், அவற்றை நடத்துதல் ஆகிய தொழிலே இதழியல் எனப்படும்'** என, சேம்பரின் இருபதாம் நூற்றாண்டு அகராதி (Chambers) சுட்டுகிறது.

### அறிஞர்களின் கருத்து

**'பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப் பெற்ற வளரும் மனித நலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடை பயில்கின்றது'** என்று அமெரிக்க இதழியல் பேராசிரியரான **ஹெரால்டு பெஞ்சமின் (Harold Benjamin)** குறிப்பிடுகின்றார்.

**ஜி.எப். மோட் (G.F. Mott)** என்பவர் விரிவாக **'இதழியல் என்பது, பொதுமக்கள் தொடர்புக்கு உரிய புதிய சாதனங்களைப் பயன்படுத்திப் பொதுச்செய்திகளையும் பொதுவான பொழுதுபோக்குகளையும் முறையாகவும் நம்பிக்கைக்கு உரிய வகையிலும் பரப்புவதாகும்'** என்று குறிப்பிடுகின்றார்.

**'பெரும்பாலும் ஒரு நாளிதழ் அறிவிப்பதும் கருதுவதும் தான் வரலாற்றுக்கு மூலப்பொருளாகவும் வரலாற்று ஆசிரியர்களுக்கு மிகவும் மதிப்புடையதாகவும் அமைகின்றது'** என்பது **பிராங் மோரேஸ் (Frank Moraes)** ,என்பவரின் கருத்தாகும்.

இந்திய அறிஞர் ஆர். இராமச்சந்திர ஐயர் கூறுவதாவது,**"இதழ்களுக்கு, குறிப்பாகச் செய்தித்தாட்களுக்கு எழுதும் தொழிலைத்தான் முதன்முதலில் இதழியல் என்ற சொல் குறித்தது. இப்பொழுது அதனுடைய பொருளும் பரப்பும்**

**விரிவடைந்து, செய்திகளையும் கருத்துக்களையும் பரப்புகின்ற மக்கள் தொடர்பு நிறுவனமாக மாறியும், சமுதாய விழிப்புணர்ச்சியின் ஓர் உறுப்பாக அதுவே உருவெடுத்தும், அதனுடைய நடவடிக்கைக்கு அற அடிப்படையிலும் சட்டநோக்கிலும் பொறுப்பேற்கும் அமைப்பாகவும் இதழியல் திகழ்கின்றது."**

## உலகின் மிகப்பழைய இதழ்

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மரப்பலகையில் செதுக்கிய இதழ்கள் சீனாவில் வெளியாயின. கிஸ்போ, பீகிங் நியூஸ், பீகிங் கெஜட் முதலியன அவ்வாறு வெளியான இதழ்களாகும். கி.பி.1835 வரை வெளியான பீகிங் நியூஸ் இதழுக்கு விழா 1200ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இந்த இதழே உலகின் மிகப்பழைய இதழாகக் கருதப்படுகிறது.

## இந்தியாவில் இதழியலின் தொடக்கக் காலம்

இந்தியாவில் முதல் அச்சகம் 1556இல் கோவாவில் தொடங்கப்பட்டது. இங்கிருந்து சுமார் 80 ஆண்டுகள் காலம் 'ஒ எரால்டோ' என்ற போர்த்துக்கீசிய நாளிதழ் வெளிவந்தது. அது 1633ஆம் ஆண்டு நின்றுபோனது. அதனை இந்தியாவில் இருந்து வெளிவரும் ஒரே போர்த்துக்கீசிய நாளிதழாகக் கருதினர். பேராசிரியர் அந்தோணி என்னும் போர்த்துக்கல் இறையியல் பேராசிரியர் **'இறையியல் உரைகள்' (Catechism)** என்ற நூலை 1556இல் அச்சிட்டார். அதுவே முதல் நூலாகும். புனித சேவியர் என்பார் மொழிபெயர்த்த நூல் ஒன்றை **'தம்பிரான் வணக்கம்'** என்ற பெயரில் அச்சிட்டு வெளியிட்டார். அதனை மொழிபெயர்த்துத் தமிழில் தந்தவர் அண்டிறிக் பாதிரியார் ஆவார். இவரைத் 'தமிழச்சுத் தந்தை' என்பர். இதுதான் முதல் தமிழ் நூலாகவும் கருதப்படுகிறது. அக்காலத்து இறையியல் நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்ததால் இவரைத் "தமிழ் மொழிபெயர்ப்புத் தந்தை" என்றும் போற்றுவர். 1779இல் பெப்ரிசியஸ் பாதிரியார் எழுதிய "தமிழும் ஆங்கிலேசுமாயிருக்கிற அகராதி (A Malabar and English Dictionary) என்ற நூல் வெளியானது. இது தமிழ் ஆங்கில அகராதிகளின் முன்னோடி எனலாம். முதல் இதழ் எனக் கருதப்பட்ட **'தமிழ் மேகசின்'(1856)** என்னும் இதழில் பிற செய்திகளுடன் அறிவியல் செய்திகளும் முதன்முதலாக வெளிவரத் தொடங்கின.

## சிறுவர் இதழ்கள்

சிறுவர்களுக்கான இதழ்களை எல்லா நாடுகளும் வெளியிடுகின்றன. படங்கள் நிறைந்தனவாகவும் கதைகள் அதிகம் கொண்டனவாகவும் சிறுவர்

இதழ்கள் உள்ளன. வாசகர்களாக மட்டுமின்றிப் படைப்பாளர்களாகவும் சிறுவர்கள் உள்ளனர். சிறுவர் இதழ்கள் சிறுவர்களது உள்ளத்தைப் பண்படுத்துகின்றன. அறஉணர்வு, நீதிபோதனை சார்ந்த கதைகள், புராணம், வரலாறு, கல்வி, அறிவியல் தொடர்பான கதைகள், கட்டுரைகள் முதலியன எளிய நடையில் வெளியாகின்றன.

குழந்தைகளுக்கென எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் நிலையில் பல இதழ்கள் வருகின்றன. துளிர், பெரியார் பிஞ்சு, சுட்டி விகடன், அம்புலிமாமா, பாலமித்ரா, ராணி காமிக்ஸ் முதலியன குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. குழந்தைகளுக்கு அறிவு, சிந்தனையைத் தூண்டும் கதைகள், விடுகதை, வேடிக்கைக் கதைகள், ஓவியம், வினோதக் கதைகள் முதலியன முக்கிய உள்ளடக்கமாக அமைகின்றன.

### இதழ்கள் படித்தலும் பள்ளி மாணவர்களும்

மனிதரின் அறிவாற்றல் எல்லையற்று விரிந்த வண்ணம் உள்ளது. இதற்கு இணையாக மக்களது மொழித்திறன் வளர்ச்சி அமைய வேண்டும். மொழித் திறன்களைப் பாடப்புத்தகங்களே மாணவர்களிடம் முற்றிலும் வளர்த்துவிடும் என்று எதிர்பார்க்க இயலாது. பள்ளிப்பாடப் புத்தகங்கள் மாணவர்கள் அடைய வேண்டிய அறிவுத்திறன் வளர்ச்சிக்கென்றே எழுதப்படுகின்றன. எனினும், வேகமாகவும் விவேகமாகவும் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் மக்களது அறிவார்ந்த இதர வளர்ச்சிகளுக்கேற்ப இன்றைய மாணவர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குப் பாடப்புத்தகங்களைத் தவிர வெவ்வேறு நூல்களையும் படிக்க வேண்டியது தேவையாகிவிட்டது. ஒரு குழந்தையின் முழு வளர்ச்சி என்பதில் அக்குழந்தையின் சரியான மொழித்திறன் வளர்ச்சியும் உள்ளடங்கி யுள்ளது. பாடம் சார்ந்த திறன்களுடன் பல்வகைப் பொது அறிவிலும், தற்சிந்தனை, படைப்பாற்றல், எதையும் கூர்ந்த மதிநுட்பத்துடன் ஆய்ந்துதெளியும் உள்ளாற்றல் ஆகியவற்றிலும் சிறந்து விளங்குவது இன்றைய மாணவருலகிற்குப் பெரிதும் தேவையாகிவிட்டது. இவ்வகையிலான அனைத்துத் திறன்களும், பல்வேறு இதழ்களைப் படிப்பதால் நன்கு வளர்க்கப்படுவதுடன் அவை மேம்பாடு அடைகின்றன எனபது மிகத் தெளிவான உண்மையாகும்.

இதழ்களின் பண்பு நலன்களான அறிவித்தல், அறிவுறுத்தல், மகிழ்வித்தல், வழிகாட்டுதல் ஆகியவை மாணவர்களை அறிவார்ந்த வகையில் செம்மைப்படுத்தவும், நன்னெறிப்படுத்தவும் பெரிதும் பயன்படுகின்றன. புத்தகப்படிப்பே ஒரு முழு மனிதனை உருவாக்குகிறது' (Reading Maketh a Man) என்பதும் 'கண்டது கற்றவன் பண்டிதனாவான்" என்பதும் 'படி படி நல்ல தமிழ்

நூலைப்படி, காலை படி, மாலை படி கடும்பகல் படி' – என்ற பாவேந்தரது கருத்தும் இதழ்கள் படித்தல் என்ற திறன்வளர் செயலுக்கு மேலும் மெருகூட்டுகின்றன. இத்துடன், மொழிதொடர்பான பேச்சு, எழுத்து, உரையாடும் திறன், வர்ணனை, வினா எழுப்புதல், தொடர்ந்து பிழையின்றிச் சொந்த நடையில் பேசுதல் ஆகிய ஆற்றல்கள் மாணவர்களிடம் மிகச்சிறப்பாக வளர வேண்டும். இதற்குக் குறிப்பாகச் சிறுவர் இதழ்கள் நன்கு பயன்படுகின்றன. வரையறுக்கப்பட்ட பாடப்புத்தகத் திறன்களானவை, மாணவர்கள் மேற்கொள்ளும் பிறவகைப் படிப்புகள் (Extra Reading) மூலமே முழுமையும் செம்மையும் அடைகின்றன.

ஆகவே, மாணவர்களைச் சிறுவர் இதழ்களைப் படிக்கச் செய்து, அதனைப் போன்றே சிறுவர் இதழ்களைத் தங்களின் கையெழுத்தில் உருவாக்கச் செய்தல் மூலம் அவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

## 3.5 விளம்பரம், அறிவிப்பு, முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்

### விளம்பரம், அறிவிப்பு, முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்

### 3.5.1 விளம்பரம்

எந்த இதழைப் புரட்டினாலும் அதன் விற்பனை அளவிற்கும் புகழுக்கும் ஏற்ப விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருப்பதைக் காணலாம். விளம்பரம் என்பது, படங்கள், கவர்ந்திழுக்கும் சொற்கள், தொடர்களைப் பயன்படுத்திப் பொருள்களை வாங்குவதற்கு மக்களைத் தூண்டும் முறையாகும். இதழ்களில் பல வகையான விளம்பரங்கள் வெளிவருகின்றன. வணிக விளம்பரம், நிறுவன விளம்பரம், அறிவிப்பு விளம்பரம், தொழில் விளம்பரம், அரசு விளம்பரம், பங்குச்சந்தை விளம்பரம் போன்ற விளம்பரங்களை நாளிதழ்களில் காணலாம்.

### விளம்பரம் உருவாக்குதல்

பொருள்களை விளம்பரப்படுத்த விளம்பரதாரருக்கும் புதிய பொருள்களைப் பற்றி அறிந்து அவற்றை வாங்கிப் பயன்படுத்திட நுகர்வோருக்கும் விளம்பரங்கள் உதவுகின்றன. விளம்பரம் என்பது ஒரு வகையான கருத்தியல் வெளிப்பாடு ஆகும். அதன்மூலம் பரந்துபட்ட நிலையில் பொதுக் கருத்தியலை உருவாக்கிட இயலும். விளம்பரத்தில் பயன்படுத்தப்படும் மொழி மிகவும் முக்கியமானது. அது

மக்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடியதாகவும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருத்தல் அவசியமானது.

### நல்ல விளம்பரத்தின் இயல்புகள்

- நுகர்வோருக்கு அறிவூட்டும் வகையில் இருத்தல் வேண்டும்.
- நுகர்வோரிடம் தாக்கத்தினை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும்.
- நம்பகத்தன்மை மிக்கதாக அமைய வேண்டும்.
- நுகர்வோரின் மனவுணர்வுகளைத் தூண்டுவதாக அமைதல் வேண்டும்.
- செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- மேலோட்டமான நிலையிலும், நினைவில் பதியுமாறும் அமைந்திருத்தல் வேண்டும்.
- நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கும்படி இருத்தல் வேண்டும்.
- கருத்துத் தெளிவும் சொற்சிக்கனமும் பெற்றதாக இருக்க வேண்டும்.

### தமிழில் விளம்பரங்கள்

வணிக நிறுவனங்கள், வங்கிகள், தொழிற்சாலைகள் போன்றவை வணிக நோக்கில் விளம்பரங்களைத் தமிழில் வெளியிடுகின்றன. பொதுவாக, இன்று உலகமயமாக்கல் காரணமாகத் தமிழ்நாட்டின் சந்தையானது உலக வணிகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களின் பொருள்களை விற்பனை செய்ய விளம்பரங்களே பெரிதும் உதவுகின்றன. இந்நிலையில் பிறமொழி பேசும் முதலாளிகள், விளம்பர நிறுவனங்கள் மூலம் பல்வேறு ஊடகங்களின் வழியாக விளம்பரப்படுத்துகின்றனர். பரந்துபட்ட மக்களைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படும் விளம்பரங்கள் தனித்துவமான காட்சியமைப்பு, மொழி ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

### விளம்பரத்தில் மொழிப்பயன்பாடு

விளம்பரங்களில் மொழியைப் பல்வேறு நிலைகளில் கையாளும்போது மக்களை எளிதில் கவருகின்றன. இதற்காக, எழுத்து, இலக்கியத் தொடர், இலக்கண நூற்பா, உவமை, உருவகம், அணிகள், தொடைநயங்கள், தொன்மம், பழமொழி ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். இவை விளம்பரங்களில் கவர்ச்சியான தன்மையையும் அழகையும் கொடுக்கின்றன. எழுத்தின் அளவு, அழுத்தம், வடிவம் போன்றவை எழுத்து உத்திகளாகும். இந்நிலையில் மற்றவர்களைக் கவரும் நிலையில் விளம்பரம் அமைய வேண்டும் எனில் அதனை

உருவாக்குபவர் ஒன்றனைப் புதுமையாக வெளிப்படுத்துபவராக இருத்தல் வேண்டும். எனவே, மாணவர்களை விளம்பரங்கள் உருவாக்கச் செய்வதன் மூலம் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

எ.கா:

**கொடுக்கப்பட்டுள்ள குறிப்பினைக் கொண்டு விளம்பரம் உருவாக்குதல்**

புத்தகக் கண்காட்சி

டிசம்பர் 01 2022 முதல் டிசம்பர் 31 2022 வரை

கம்பன் தமிழ்ச் சங்கம்

காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை

அனுமதி இலவசம்

**கீழ்க்காணும் பொருள்களை விளம்பரம் செய்வதற்குப் பொருத்தமான தொடர்களை உருவாக்குதல்**



**விளம்பரத் தொடர்கள்**

இங்குச் சுவையான இனிப்புகள் கிடைக்கும்.

மணக்க! மணக்க!! சுவைக்க! சுவைக்க!!

பாரம்பரிய இனிப்புகள்!!!

### 3.5.2 அறிவிப்புகள்

மக்களுக்கு இன்றியமையாத சில செய்திகளைத் தெரிவிப்பதற்காக உருவாக்கப்படுபவை அறிவிப்புகள் எனப்படும். பேருந்து, வானூர்தி, கப்பல், தொடர்வண்டி இவை புறப்படும் நேரம், காலதாமதம் போன்ற செய்திகள் அறிவிக்கப்படுபதை நாம் கவனித்திருப்போம். இவ்வாறே பொது மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்பும் தகவல்களை அறிவிப்புகளாக உருவாக்கச் செய்யலாம். பிறரைக் கவரும் வகையில் அமையும் அறிவிப்புகளே மக்களை எளிதில் சென்றடையும்.

### 3.5.3 முழக்கத் தொடர்கள்

முழக்கத்தொடர் என்பது எளிதில் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடியது; தனித்தன்மைமிக்கது; ஒரு குறிப்பிட்ட நிகழ்வின் முதன்மையைச் சுருக்கமாகக் கூறுவது; மக்களிடையே நேர்முக உணர்வுகளை வெளிப்படுத்தும் சொற்றொடர் ஆகும்.

**முழக்கத் தொடர்கள் உருவாக்கும்போது கவனிக்க வேண்டியவை**

- நாம் எந்தச் செய்தியை வலியுறுத்துகிறோமோ அந்தச் செய்தியின் கருத்தை வலுப்படுத்துதல் வேண்டும்.
- அதற்கேற்ற சில உறுதியான/செறிவான/வலுவான சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.
- மையக் கருத்தை வெளிப்படுத்துவதாய் அமைதல் வேண்டும்.
- உரிய நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

**முழக்கத் தொடர்கள் உருவாக்கும் முறைகள்**

முழக்கத் தொடர்களை உருவாக்கச் செய்ய முற்படும்போது கீழ்க்காணும் முறைகளைப் பின்பற்றலாம்.

- உரைப்பகுதியைப் படித்து முழக்கத் தொடர்கள் உருவாக்கலாம்.
- பாடலின் பொருளின் அடிப்படையில் முழக்கத் தொடர்கள் உருவாக்கலாம்.
- படங்களைப் பார்த்து முழக்கத் தொடர்கள் உருவாக்கலாம்.
- தலைப்புகள் குறித்து முழக்கத் தொடர்கள் உருவாக்கலாம்.

**எ.கா :**

**உரைப்பகுதியைப் படித்து முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்**

வெப்பமடைந்து வரும் புவியினால் மனிதன் அழிவை நோக்கிச் செல்லும் கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டான். இதனைத் தவிர்க்க மரங்களை வளர்க்க வேண்டும். "வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்" என்ற நிலைமாறி "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்று சொல்லும் நிலைக்கு வந்துவிட்டோம். எனவே, இயற்கையைப் பாதுகாக்கும் முதல் காரணியான மரம் வளர்ப்பு பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முழக்கத்தொடர்களை உருவாக்குங்கள்.

மேற்கண்ட உரைப்பகுதியின் மையக் கருத்தைக் கொண்டு,

- மரம் வளர்ப்போம்; மழைவளம் பெறுவோம்!
- மரம் வளர்ப்போம்; மண்ணைக் காப்போம்!
- மரம் ஒரு வரம்; அதுவே உயிரின் சுவாசம்!
- மரம் வளர்த்தால் மழை பொழியும்; மழை பொழிந்தால் மானுடம் செழிக்கும்!
- மரத்தை வாழ விடுங்கள்; மரங்கள் நம்மை வாழவைக்கும்!

என்பவை போன்ற முழக்கத்தொடர்களை உருவாக்கலாம்.

### பாடலின் பொருளின் அடிப்படையில் முழக்கத் தொடர்கள் உருவாக்குததல்

**"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த விடத்து"**

என்ற குறளின் கருத்தையும்,

**"ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரையில் வாடி இருக்குமாம் கொக்கு"**

என்ற மூதுரைப் பாடலின் பொருளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

கொக்கானது தனக்குரிய உணவான மீனைப் பிடிக்கப் பொறுமையுடன் காத்திருந்து சரியான நேரத்தில் வேகமாகச் செயல்பட்டு உணவைப்பெறும். அதைப்போல அறிவுடையோரும் உரியகாலம் வரும்வரை பொறுமையாகக் காத்திருந்து விரைந்து செயலாற்றுவர்.

மேற்கண்ட கருத்தை மையமாகக்கொண்டு,

- காலத்தே பயிர்செய்.
- காலம் அறிந்து கடமையாற்று.
- பொன்போன்ற காலத்தில் கண்ணெனக் கடமையாற்றுவோம்.
- காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
- வாய்ப்பைக் கொண்டு வெற்றிகொள்.

முதலான முழக்கத் தொடர்களை உருவாக்கலாம்.

இவற்றைப் போன்றே சமூகநல விழிப்புணர்வுச் செய்திகளுக்கு முழக்கத் தொடர்களை உருவாக்கலாம்.

### சுற்றுப்புறத்தூய்மை

**எ.கா :**

சுற்றுப்புறம் காப்போம்; சுகமாய் வாழ்வோம்.

### பெண்கல்வி

**எ.கா :**

வானுக்கு நிலவு அழகு; பெண்ணுக்குக் கல்வி அழகு.

## 3.6 தொகுப்புரை

### தொகுப்புரை

ஒவ்வொரு காலகட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சமுதாயச்சூழல், அரசியல் போக்கு, இயற்கை வளம், மக்களின் மனநிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அந்தந்தக் காலகட்டத்தில் வாழ்கின்ற படைப்பாளிகள் இலக்கியங்களைப் படைக்கின்றனர். இலக்கியங்கள் பயிலுந்தோறும் புதுப்புதுச் சுவைகளையும், கருத்துகளையும் வழங்குவதை நாம் அறிவோம். தொடக்க நிலையில் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்க முற்படும்போது எளிய முறைகளைக் கையாள வேண்டும். படங்களின் மூலம் படைப்பாற்றலை வளர்க்கும் செயல்பாட்டை அளிக்கையில் மாணவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவதைக் காண இயலும். சூழலுக்கேற்ற கற்பனை வெளிப்பாடு என்பது நமக்குப் புதிதன்று. அதற்கு நம் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. மொழி விளையாட்டுகளும் குறுக்கெழுத்துப் புதிர்களும் மாணவர்களைக் கற்றலில் மட்டுமன்று, படைப்பாற்றலிலும் ஈடுபடுத்தக் கூடியவை. மாணவர்கள் உருவாக்கிய படைப்புகளை கையெழுத்து இதழாக உருவாக்கச் செய்யலாம். மேலும், விளம்பரம், அறிவிப்பு, முழக்கத் தொடர்கள் ஆகியவற்றை உருவாக்கச் செய்தல் என்பது படைப்பாற்றலுக்கான அடுத்த நிலைக்கு மாணவர்களைக் கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |
|---|
| 1. 'தமிழ் மொழி' சார்ந்த தலைப்பில் குறுக்கெழுத்துப் போட்டினை உருவாக்குக. |
| 2. கையெழுத்து இதழில் இடம் பெறவேண்டிய சில தகவல்களைக் கூறுக. |
| 3. கீழ்க்கண்ட பொருள்களுக்கு விளம்பர பலகை உருவாக்குக.<br>அ) சோப்பு ஆ) துணிக் கடை இ) பல் மருத்துவமனை |